## அமைச்சர் மா.சுப்பிரமணியன் தலைமையில்

# “சமத்துவம் பொங்கட்டும் - தமிழ்நாடு வெல்லட்டும்” கோலப் போட்டி!

## உலக சாதனை படைத்தது!





சென்னை,ஜன.24-
“சமத்துவம் பொங்கட்டும் - தமிழ்நாடு வெல்லட்டும்” எனும் பொருளில் சைதாப்பேட்டையில் கடந்த 14 நாட்களாக 40 ஆயிரத்திற்கும் மேற்பட்ட குடும்பத்தினர் பங்கேற்று தத்தமது வாயில்களில் வண்ண வண்ணக் கோலமிட்ட கோலப்போட்டிகள் ‘வேர்ல்டு ரெக்கார்ட்டு யூனியன்’ அமைப்பின் உலக சாதனைக்கான போட்டியாக அங்கீகரிக்கப்பட்டு சான்றிதழ் மற்றும் கேடயம் வழங்கப்பட்டுள்ளது.

சைதாப்பேட்டைத் தொகுதியில் ஜனவரி 2ஆம் நாள் தொடங்கி இன்று (21-1-2026) வரை கடந்த பதினான்கு நாட்களாக மாண்புமிகு அமைச்சர் - சென்னை தெற்கு மாவட்டக் கழக செயலாளர் திரு.மா. சுப்பிரமணியன் அவர்கள் முன்னெடுப்பில் சைதைத் தொகுதியில் உள்ள 14 வட்டங்களிலும் தத்தமது வாயில்களில் உலக சாதனைக்கானக் கோலப்போட்டிகள் நடத்தப்பட்டது.

இப்போட்டிகளில் பங்கேற்று வரையப்பட்ட வண்ணக்கோலங்களை அந்தந்த வட்டங்களில்ல் உள்ள அனைத்துத் தெருக்களிலும் காலை 6 மணிக்கே மாண்புமிகு அமைச்சர் மா. சுப்பிரமணியன் அவர்கள் நடந்தே சென்று பார்வையிட்டு, வண்ணக் கோலங்கள் வரையும் பெண்களைப் பாராட்டி உற்சாகப்படுத்தி வந்தார். இப்போட்டிகளில் பங்கேற்று வரையப்பட்ட வண்ணக்கோலங்களை நடுவர் குழு மூவரைத் தேர்ந்தெடுத்து அவர்களுக்கு மூன்று பரிசுகள் முதல்பரிசு துணி துவைக்கும் இயந்திரம், இரண்டாம் பரிசு மாவரைக்கும் இயந்திரம் மூன்றாம் பரிசு மிக்ஸி, பங்கேற்ற அனைவருக்கும் ஹாட்பாக்ஸ் ஆகியவை அன்று மாலை நடைபெறும் பரிசளிப்பு நிகழ்ச்சியில் வழங்கப்பட்டது.

அதன் விவரம் வருமாறு:

2-1-2026 வெள்ளிக்கிழமை 142வது வட்டத்தில் உள்ள அனைத்துத் தெருக்களில் கோலப்போட்டி நடைபெற்றது. பரிசளிப்பு விழா அடுத்த நாள் மாலை சைதாப்பேட்டை காரணீஸ்வரர் கோயில் தெரு தேரடியில் நடைபெற்றது. இக்கோலப் போட்டியில் முதல் பரிசு துணி துவைக்கும் இயந்திரம் கோதாமேடு - திவ்யா கார்த்திக், இரண்டாம் பரிசு மாவு அரைக்கும் இயந்திரம் சலவையாளர் காலனி - புவனேஸ்வரி, மூன்றாம் பரிசு மிக்ஸி - சாமியார்த்தோட்டம் ஆர்.சரண்யா ஆகியோருக்கு வழங்கப்பட்டது. இப்போட்டியில் பங்கேற்ற 4,410 பேருக்கும் ஹாட்பாக்ஸ் வழங்கப்பட்டது.

3-1-2026 சனிக்கிழமை 168 அ வட்டத்தில் உள்ள அனைத்துத் தெருக்களில் கோலப்போட்டி நடைபெற்றது. அடுத்த நாள் மாலை கிண்டி, லேபர் காலனியில் உள்ள லயன்ஸ் கிளப் பள்ளியில் பரிசளிப்பு விழா நடைபெற்றது. முதல் பரிசு ஈக்காட்டுத்தாங்கல் சாமுண்டீஸ்வரிக்கும், இரண்டாவது பரிசு பிள்ளையார் கோயில் தெரு சரசுவதிக்கும், மூன்றாவது பரிசு பிள்ளையார் கோயில் தெரு நிகிதாவுக்கும் வழங்கப்பட்டது. இப்போட்டியில் பங்கேற்ற 2,400 பேருக்கும் ஹாட்பாக்ஸ் வழங்கப்பட்டது.

4-1-2026 ஞாயிற்றுக்கிழமை 142 அ வட்டத்தில் உள்ள அனைத்துத் தெருக்களிலும் கோலப்போட்டி நடைபெற்றது. அடுத்த நாள் மாலை சைதாப்பேட்டை ரங்கபாஷ்யம் தெருவில் பரிசளிப்பு விழா நடைபெற்றது. இதில் முதல் பரிசு இளையாழ்வார் கோயில் தெரு எல். சரளாவுக்கும், இரண்டாவது பரிசு முருகன் தெரு சி.வினிதாவுக்கும், மூன்றாவது பரிசு கம்பர் தெரு எஸ்.ரம்யாவுக்கும் வழங்கப்பட்டது. இப்போட்டியில் பங்கேற்ற 2,152 பேருக்கும் ஹாட்பாக்ஸ் வழங்கப்பட்டது.

5-1-2026 திங்கள் கிழமை 168வது வட்டத்தில் உள்ள அனைத்துத் தெருக்களிலும் கோலப்போட்டி நடைபெற்றது. அடுத்த நாள் மாலை ஈக்காட்டுத்தாங்கல் பூவிருந்தவல்லி முதன்மை சாலையில் பரிசளிப்பு விழா நடைபெற்றது. இதில் முதல் பரிசு லேபர் காலனி அக்சயாவுக்கும், இரண்டாவது பரிசு ரெட்டித் தெரு காயத்திரிக்கும், மூன்றாவது பரிசு பார்சன் நகர் ஜி.சுகன்யாவுக்கும் வழங்கப்பட்டது. இப்போட்டியில் பங்கேற்ற 3,612 பேருக்கும் ஹாட்பாக்ஸ் வழங்கப்பட்டது.

6-1-2026 செவ்வாய்க்கிழமை 139வது வட்டத்தில் உள்ள அனைத்துத் தெருக்களிலும் கோலப்போட்டி நடைபெற்றது. அடுத்த நாள் மாலை மேற்கு சைதாப்பேட்டை ராகவன் காலனியில் பரிசளிப்பு விழா நடைபெற்றது. இதில் முதல் பரிசு பெரியார் ராமசாமி தெரு நித்யா சசிக்குமாருக்கும், இரண்டாவது பரிசு பள்ளித் தெரு எஸ்.ஜெயஸ்ரீக்கும், மூன்றாவது பரிசு ஆர்.வி. நகர் ஜெ.கிருத்யாவுக்கும் வழங்கப்பட்டது. இப்போட்டியில் பங்கேற்ற 3,250 பேருக்கும் ஹாட்பாக்ஸ் வழங்கப்பட்டது.

7-1-2026 புதன்கிழமை 172 அ வட்டத்தில் உள்ள அனைத்துத் தெருக்களிலும் கோலப்போட்டி நடைபெற்றது. அடுத்த நாள் மாலை காமராஜபுரம் 100 அடி சாலை கீதம் ஹோட்டல் அருகே பரிசளிப்பு விழா நடைபெற்றது. இதில் முதல் பரிசு கண்ணகி தெரு பவித்ராவுக்கும், இரண்டாவது பரிசு காந்தி தெரு செல்விக்கும், மூன்றாவது பரிசு மாதவன் தெரு திவ்யாவுக்கும் வழங்கப்பட்டது. இப்போட்டியில் பங்கேற்ற 2,697 பேருக்கும் ஹாட்பாக்ஸ் வழங்கப்பட்டது.

8-1-2026 வியாழக்கிழமை 139 அ வட்டத்தில் உள்ள அனைத்துத் தெருக்களிலும் கோலப்போட்டி நடைபெற்றது. அடுத்த நாள் மாலை மேற்கு சைதாப்பேட்டை ராகவன் காலனியில் பரிசளிப்பு விழா நடைபெற்றது. இதில் முதல் பரிசு வி.எஸ். என். கார்டன் சாந்தாலட்சுமிக்கும், இரண்டாவது பரிசு முனுசாமி தெரு சிந்துவுக்கும், மூன்றாவது பரிசு வள்ளுவர் தெரு சசிகலாவுக்கும் வழங்கப்பட்டது. இப்போட்டியில் பங்கேற்ற 3,174 பேருக்கும் ஹாட்பாக்ஸ் வழங்கப்பட்டது.

9-1-2026 வெள்ளிக்கிழமை 172வது வட்டத்தில் உள்ள அனைத்துத் தெருக்களிலும் கோலப்போட்டி நடைபெற்றது. அடுத்த நாள் மாலை மடுவின்கரை புதுத் தெரு சந்திப்பு பிள்ளையார் கோயில் தெருவில் பரிசளிப்பு விழா நடைபெற்றது. இதில் முதல் பரிசு மசுதி காலனி ஹேமலதாவுக்கும், இரண்டாவது பரிசு நேருநகர் ஐஸ்வர்யாவுக்கும், மூன்றாவது பரிசு கோகுலம் காலனி துர்காவுக்கும் வழங்கப்பட்டது. இப்போட்டியில் பங்கேற்ற 2,956 பேருக்கும் ஹாட்பாக்ஸ் வழங்கப்பட்டது.

10-1-2026 சனிக்கிழமை 140வது வட்டத்தில் உள்ள அனைத்துத் தெருக்களிலும் கோலப்போட்டி நடைபெற்றது. அடுத்த நாள் மாலை மேற்குமாம்பலம் பன்னீர் செல்வம் நகர் மைதானத்தில் பரிசளிப்பு விழா நடைபெற்றது. இதில் முதல் பரிசு ஜோதிராமலிங்கம் தெரு பிரியதர்ஷினிக்கும், இரண்டாவது பரிசு வண்டிக்காரன் தெரு பிரியாவுக்கும், மூன்றாவது பரிசு புஷ்பாவதிஅம்மாள் தெரு டி.சரண்யாவுக்கும் வழங்கப்பட்டது. இப்போட்டியில் பங்கேற்ற 2,910 பேருக்கும் ஹாட்பாக்ஸ் வழங்கப்பட்டது.

11-1-2026 ஞாயிற்றுக்கிழமை 140 அ வட்டத்தில் உள்ள அனைத்துத் தெருக்களிலும் கோலப்போட்டி நடைபெற்றது. அடுத்த நாள் மாலை சைதாப்பேட்டை சடையப்ப முதலி தெரு பரிசளிப்பு விழா நடைபெற்றது. இதில் முதல் பரிசு ஜோன்ஸ் சந்து கலைவாணிக்கும், இரண்டாவது பரிசு சடையப்பன் தெரு மிதுனாவுக்கும், மூன்றாவது பரிசு காரணித் தோட்டம் 1வது தெரு முல்லைக்கும் வழங்கப்பட்டது. இப்போட்டியில் பங்கேற்ற 1,815 பேருக்கும் ஹாட்பாக்ஸ் வழங்கப்பட்டது.

12-1-2026 திங்கள்கிழமை 170வது வட்டத்தில் உள்ள அனைத்துத் தெருக்களிலும் கோலப்போட்டி நடைபெற்றது. அடுத்த நாள் மாலை கோட்டூர்புரம் ரிவர் வியூ சாலையில் பரிசளிப்பு விழா நடைபெற்றது. இதில் முதல் பரிசு புதுத்தெரு கவுசல்யாவுக்கும், இரண்டாவது பரிசு கோட்டூர்புரம் ரூபா ஸ்ரீக்கும், மூன்றாவது பரிசு துலுக்கானத்தம்மன் கோயில் தெரு சத்யாவுக்கும் வழங்கப்பட்டது. இப்போட்டியில் பங்கேற்ற 2,894 பேருக்கும் ஹாட்பாக்ஸ் வழங்கப்பட்டது.

13-1-2026 செவ்வாய்க்கிழமை 170 அ வட்டத்தில் உள்ள அனைத்துத் தெருக்களிலும் கோலப்போட்டி நடைபெற்றது. அடுத்த நாள் மாலை கோட்டூர் மார்க்கெட், பொன்னியம்மன் கோயில் அருகே பரிசளிப்பு விழா நடைபெற்றது. இதில் முதல் பரிசு கலிக்குன்றம் திரு வீதியம்மன் கோயில் தெரு மதுமதிக்கும், இரண்டாவது பரிசு எல்லையம்மன் கோயில் தெரு கோதைக்கும், மூன்றாவது பரிசு பிள்ளையார் கோயில் தெரு ராதிகாவுக்கும் வழங்கப்பட்டது. இப்போட்டியில் பங்கேற்ற 2,214 பேருக்கும் ஹாட்பாக்ஸ் வழங்கப்பட்டது.

19-1-2026 திங்கள்கிழமை 169வது வட்டத்தில் உள்ள அனைத்துத் தெருக்களிலும் கோலப்போட்டி நடைபெற்றது. அன்று மாலை வேளச்சேரி சாலை சின்னமலையில் பரிசளிப்பு விழா நடைபெற்றது. இதில் முதல் பரிசு ஒசூர் அம்மன் கோவில் தெரு ராணிக்கும், இரண்டாவது பரிசு சின்னமலை அஸ்வினி மூர்த்திக்கும், மூன்றாவது பரிசு எல்டிஜி சாலை சந்தியாவுக்கும் வழங்கப்பட்டது. இப்போட்டியில் பங்கேற்ற 2,300 பேருக்கும் ஹாட்பாக்ஸ் வழங்கப்பட்டது.

20-1-2026 செவ்வாய்க்கிழமை 169 அ வட்டத்தில் உள்ள அனைத்துத் தெருக்களிலும் கோலப்போட்டி நடைபெற்றது. இன்று (21-1-2026) மாலை சைதாப்பேட்டை மாதிரிப் பள்ளி மைதானத்தில் பரிசளிப்பு விழா நடைபெற்றது. இதில் முதல் பரிசு துணி துவைக்கும் இயந்திரம் சூடியம்மன் பேட்டைத் தெரு ஷர்மிக்கும், இரண்டாவது பரிசு தாடண்டன்நகர் சரவணப்பிரியாவுக்கும், மூன்றாவது பரிசு ஜோதியம்மாள் நகர் 3வது தெரு தனலட்சுமிக்கும் வழங்கப்பட்டது. இப்போட்டியில் பங்கேற்ற 4,500 பேருக்கும் ஹாட்பாக்ஸ் வழங்கப்பட்டது.

ஆக கடந்த 14 நாட்களாக சிறப்பாக நடைபெற்ற கோலப்போட்டியில்

40 ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் பங்கேற்றதை வேர்ல்டு ரெக்கார்டு யூனியன் சார்பில் உலக சாதனைக்கு அங்கீகரிக்கப்பட்டு சான்றிதழ் மற்றும் கேடயம் வழங்கப்பட்டது. அனைவருக்கும் சான்றிதழ்கள் பிரேம் அமைத்து வழங்கப்பட்டது குறிப்பிடத்தகுந்தது.



சென்னை வடகிழக்கு மாவட்ட இளைஞர் அணியின் நிர்வாகிகள் மற்றும் ஒன்றியம், பகுதி, பேரூர் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்களுக்கான ஆலோசனைக் கூட்டம் மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் திருவெற்றியூர் ஆர்.டி.மதன்குமார் தலைமையில் 22.01.2026 நேற்று நடைபெற்றது. இதில் மொழிப்போர் தியாகிகள் வீரவணக்க நாள் பொதுக்கூட்டத்திற்கு துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் வருகை குறித்து ஆலோசிக்கப்பட்டது. இதில் இளைஞரணி துணைஅமைப்பாளர்கள் சி.எஸ்.எஸ்.டி.சீனிவாசன், த.வேல்கணேசன், டி.ஜி.ஆர். மணிவண்ணன் ஜி.கே. இனியன், வி.மணிகண்டன், உள்ளிட்ட நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



சென்னை, கலைவாணர் அரங்கில் தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ. சாமிநாதன் நேற்று (23.01.2026) செய்தி மக்கள் தொடர்புத் துறை சார்பில் ஊடக மையம் மற்றும் தமிழ்நாடு தகவல் சரிபார்ப்பகம் இணைந்து ”ஏன் ? எதற்கு ? எப்படி ? என்ற தலைப்பில் 8 பிரிவுகளில் நடத்திய விழிப்புவுணர்வுப் போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு பாராட்டுச் சான்றிதழ்கள் மற்றும் பதக்கங்கள் வழங்கினார். இதில் அரசு அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

## முதல்வர் மு.க.ஸ்டாலின் பிறந்தநாளையொட்டி

# “அன்னம் தரும் அமுதகரம்” 338 வது நாள்!

## எழும்பூர் தெற்கு பகுதியில் உணவு வழங்கப்பட்டது!

சென்னை,ஜன.24-
முதலமைச்சர் அவர்களின் 72வது பிறந்த நாளை முன்னிட்டு சென்னை கிழக்கு மாவட்ட திமுக சார்பில், 2025 பிப்ரவரி 20ஆம் தேதி முதல், 2026 பிப்ரவரி 19ஆம் தேதி வரையிலான 365 நாட்களும், நாள் ஒன்றுக்கு 1000 நபர்களுக்கு காலை உணவு வழங்கும் சிறப்புமிகு “அன்னம் தரும் அமுதக்கரங்கள்” மாபெரும் திட்டத்தின் 338 ஆம் நாளான - கழகத்தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் இனிய பிறந்த நாளை முன்னிட்டு நேற்று (23.01.2026), எழும்பூர் தெற்கு பகுதி: 1) வட்டம் 108, வைத்தியநாதன் தெரு, செல்வ விநாயகர் கோயில் அருகில், 2) வட்டம் 108அ



அம்பேத்கர் திடல் சேத்துப்பட்டு ஆகிய பகுதிகளில் மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் திரு.பி.கே.சேகர்பாபு அவர்களின் வழிகாட்டுதல்படி தமிழ்நாட்டு நலன்களையும், எதிர்காலத்தையும் யாருக்காவும், எதற்காகவும் விட்டுத்தரமாட்டோம். தமிழ்நாட்டின் உரிமைகளுக்காக ஒன்றுபட்டு போராடுவோம். தமிழ்நாடு போராடும், தமிழ்நாடு வெல்லும் - இதுதான் ஒரே இலக்கு!” என்ற உறுதிமொழியை ஏற்று பொதுமக்களுக்கு காலை உணவு வழங்கப்பட்டது.

இந்நிகழ்ச்சியில் பெருநகர சென்னை மேயர் பிரியா ராஜன், வி.சுதாகர், சொ.வேலு, கோ.ஏகப்பன், கே.எஸ்.ரவிச்சந்திரன், தமிழன் பிரசன்னா, புனிதவதி எத்திராசன், கே.எஸ்.எம்.நாதன், கோ.மணி, ஜி.தாமோதரன், பி.எம்.யாழினி, ராஜேஸ்வரி ஸ்ரீதர், பரிதிஇளம்சுருதி, எழும்பூர் தெற்கு/வடக்கு வட்ட கழக செயலாளர்கள்: வி.விஜயகுமார், ஆர்.பாபு, டால்பின் எஸ்.அரிகிருஷ்ணன், இ.மொய்தீன், வான்மதி கதிரவன், எல். சுந்தர்ராஜன், தி.தயாளன், வி.அபாய், சு.மனோகர், ந.பாலு, ஆர்.எம்.ரங்கநாதன், சி.சேகர், ஒருங்கிணைப்பாளர்கள்: சொ.வேலு, S.முரளி, பெரம்பூர் R.ராஜன், K.R.அபரஞ்சி, அசோக் ஜெயின், P.விஜயகுமார், ம.அசோக்குமார், L.சம்பத்குமார், க.பா.பிரதீப் குமார் மற்றும் கழக நிர்வாகிகள் முன்னோடிகள் கலந்து கொண்டனர்.

## டி.ஆர்.பாலு எம்.பி., அமைச்சர் தா.மோ.அன்பரசன், இரா.தமிழரசன், நா.அருண் உரை!

# தாம்பரத்தில் மொழிப்போர் தியாகிகளுக்கு வீரவணக்க நாள் பொதுக்கூட்டம்!

## மாநகர கழகச் செயலாளர் எஸ்.ஆர்.ராஜா எம்.எல்.ஏ. வேண்டுகோள்!

சென்னை,ஜன.24-
மாநகர கழகச் செயலாளர் எஸ்.ஆர்.ராஜா வேண்டுகோள் வருமாறு:

நாளை (25.01.2026) ஞாயிற்றுக்கிழமை அன்று மாலை 6.00 மணியளவில், மேற்கு தாம்பரம், சண்முகம் சாலை, பாரதி திடலில், தாம்பரம் மாநகர மாணவர் அணி நடத்தும்,மொழிப்போர் தியாகிகளுக்கு வீரவணக்க நாள் பொதுக்கூட்டம் எனது தலைமையிலும் எஸ்.ஆர்.ராஜா.எம்.எல்.ஏ.,மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர் பேராசிரியார் எல்.பிரபு,மாநகர இளைஞர் அமைப்பாளர் பி.கே.ஏ.சத்திய பிரபு, மாநகர மாணவர் அணி அமைப்பாளர் சு.கார்த்திக், வீ.கார்த்திக், ச.ராஜேஷ், வே. சிவசுப்பிரமணியன், ச.பிரபு, ஜெ.இன்சமாம். மு.தினேஷ் குமார், லோ.இலக்கியா, ஏ.செந்தில் குமார், அ. ஜோஸ்பிரபு, எம்.இளவரசன், சி.ப.வினோத் குமார், இரா.முரளிதரன் ஆகியோர்கள் முன்னிலையில், கட்டாய இந்தி திணிப்பை எதிர்த்து, தாய் மொழியாம் தமிழ் மொழிக் காத்திட, தன் தேக்கு மர தேக உடலை தீனாக்குகளுக்கு இரையாக்கியும், உண்ணா நிலை போராட்டங்களில் தன் உயிரை மாய்த்துக் கொண்ட மாவீரர்களுக்கு வீரவணக்க நாள் பொதுக்கூட்டத்தில் கழகப் பொருளாளர் நாடாளுமன்ற மக்களவைக்குழுத் தலைவர் டி.ஆர்.பாலு பி.எஸ்சி., எம்.பி., , குறு, சிறு (ம) நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் காஞ்சி வடக்கு மாவட்டக் கழகச் செயலாளர் தா.மோ.அன்பரசன் , தலைமைக் கழகப் பேச்சாளர்கள் இரா.தமிழரசன், நா.அருண், உரையாற்றிட உள்ளனர். மேலும் இக்கூட்டத்தில் தலைமை தீர்மான குழு உறுப்பினர் மீ.அ.வைதியலிங்கம் Ex.M.L.A., , காஞ்சி வடக்கு மாவட்ட துணைச் செயலாளர் இ.கருணாநிதி எம்.எல்.ஏ., ,மேயர் க.வசந்தகுமாரி,துணை மேயர் கோ. காமராஜ்,தொகுதி பார்வையாளர் பரிதி இளம் சுருதி, மண்டலக்குழுத் தலைவர்கள் டி.காமராஜ், எஸ்.இந்திரன், வே.கருணாநிதி, இ.ஜோசப்அண்ணாதுரை, எஸ்.சேகர், வ.விஜயரங்கன், இரா.நரேஷ்கண்ணா, பி.சதாசிவம், கி.வேல்மணி, எஸ்.ஜி.கருணாகரன், இரா. சுரேஷ், த.ஜெயகுமார், ஆ.நடராஜன், இ.எஸ்.பெர்னாட், ஏ.கே.கருணாகரன், ஆதிமாறன், க.தேவேந்திரன், ஆர்.எஸ்.சங்கர், மு.ரஞ்சன், வே.ராசேந்திரன், வி.ரவிச்சந்திரன், கோ.ஜானகிராமன், பம்மல் தினேஷ், ரமணி ஆதிமூலம், எ.மனோகரன், இரா. விஜயகுமார், இரா.ரத்தினகுமார் மற்றும் மாநகர அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், வட்டக் கழக செயலாளர்கள், மாமன்ற உறுப்பினர்கள், மாவட்டக் கழக பிரதிநிதிகள், மாநகர, பகுதி, வட்ட நிர்வாகிகள், மாணவர் அணி, இளைஞர் அணி உள்ளிட்ட அனைத்து அணிகளின் நிர்வாகிகள், கழகத் தோழர்கள், பொது மக்கள் என ஏராளமானோர்கள் கலந்துக் கொண்டு சிறப்பித்திடுமாறு மாநகர கழகச் செயலாளர் எஸ்.ஆர்.ராஜா எம்.எல்.ஏ., தனது அறிக்கையில் கேட்டுக்கொண்டுள்ளார்.

# வேளச்சேரி மேற்கு பகுதிக் கழக நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம்!

## பகுதிப் பொறுப்பாளர் வே.ஆனந்தம் எம்.சி. அறிக்கை!

சென்னை, ஜன. 24
வேளச்சேரி மேற்கு பகுதிக் கழகப் பொறுப்பாளர் வேளச்சேரி வே.ஆனந்தம் எம்.சி. விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

சென்னை தெற்கு மாவட்டம், வேளச்சேரி மேற்குப் பகுதிக் கழக நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம் மாவட்டக் கழகச் செயலாளர், அமைச்சர் மா. சுப்பிரமணியன் ஆலோசனைப்படி, பகுதி அவைத் தலைவர் சி.பழனி தலைமையில் இன்று (24.01.2026 சனிக்கிழமை) மாலை 6 மணிக்கு, வேளச்சேரி, சிறுவர் விளையாட்டு பூங்கா, விஜயநகர், 1 வது மெயின் ரோட்டில் உள்ள பகுதிக் கழக அலுவலகத்தில் நடைபெறுகிறது.

இக்கூட்டத்தில் பகுதிக்குட்பட்ட மாநில நிர்வாகிகள், மாவட்டக் கழக நிர்வாகிகள், பகுதிக் கழக நிர்வாகிகள், வட்டக் கழகச் செயலாளர்கள், மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள், மாவட்டப் பிரதிநிதிகள், அனைத்து அணிகளின் பகுதி அமைப்பாளர்கள் மற்றும் பகுதி இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள், வட்ட இளைஞரணி அமைப்பாளர்கள் ஆகியோர் தவறாமல் பங்கேற்று சிறப்பிக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

பொருள்:

கழக ஆக்கப் பணிகள்.

இவ்வாறு வேளச்சேரி மேற்குப் பகுதிக் கழகப் பொறுப்பாளர் வேளச்சேரி வே.ஆனந்தம் எம்.சி. அறிக்கையில் தெரிவித்துள்ளார்.





திமுக தென்காசி தெற்கு மாவட்டம் கிழக்கு ஒன்றியம் அய்யாபுரம் கிராமத்தில் பேராசிரியர் மு.பி.பா (எ) மு.பி.மணிவேந்தன் நினைவுக் கொடிக் கம்பத்தில் திமுக தென்காசி தெற்கு மாவட்ட பொறுப்பாளர் வே.ஜெயபாலன் கழகக் கொடியேற்றினார். உடன் திமுக கிழக்கு ஒன்றிய செயலாளர் அழகுசுந்தரம் , தென்காசி முன்னாள் ஒன்றிய செயலாளர் குற்றாலம் இராமையா, தென்காசி ஒன்றியத் தலைவர் சேக் அப்துல்லா மற்றும் மு.பி.பா அறக்கட்டளை அறங்காவலர்கள் மு.பி.பா.அன்புச்செழியன். திமுக ஒன்றிய பிரதிநிதி, கலையரசி, வெண்ணிலா, மணிவண்ணன், அனிதா மற்றும் அய்யாபுரம் திமுக கிளை சார்பில் செயலாளர் செல்வக்குமர், கழத்தினர்கள் கனகராஜ், வேல்ராஜ் மற்றும் ஆனந்த் மற்றும் பலர் உள்ளனர்.